# தமிழில் நவீனத் துவத்திறனாய்வும் திறனாய்வாளர்களும்

முனைவர் ந. இரத்தினக்குமார்
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, மதுரைக் கல்லூரி, மதுரை

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் திறனாய்வுமுறை பதினெட்டின் பிற்பகுதியில் தொடங்கி பத்தொன்பதில் நான்கு புலங்களை மையமிட்டு இயக்கம் கொண்டது. கல்வியாளர் திறனாய்வுக் குழு, இலக்கியவாதிகள் திறனாய்வுக் குழு, மார்க்சியத் திறனாய்வுக் குழு, திராவிட இயக்கத் திறனாய்வுக் குழு என நான்கு பள்ளிகள் திறனாய்வுப் போக்கில் தோன்றின. படைப்பாளிகளின் திறனாய்வுப் பங்களிப்பு தனித்துவமானது. படைப்பின் உள்ளடக்கம், எடுத்துரைப்பு, மொழி, செய்நேர்த்தி என இலக்கியத்தின் நவீனத்தன்மைகளைக் கவனப்படுத்தி, படைப்பின் வடிவமும் அழகியலும் முதன்மைப்படுத்தப்பட்டன. நவீனத்துவம் முன்வைத்த இலக்கியக் கொள்கைகளைப் பின்பற்றிப் படைப்புச் செயல்பாட்டில் படைப்பாளிகள் இயங்கினர்.

**திறவுச் சொற்கள் -** அழகியல் கொள்கைகள், நவீனத்துவம், மையம், வெளி, பன்முகத்தன்மை, எதிர்வினைகள், உள்வட்ட அணுகல்.

## முன்னுரை

படைப்புப் பற்றிப் படைப்பாளிகள் முன் வைத்து இயங்கிய திறனாய்வு முறைகளும் அதன் தன்மைகளும் நவீனத் தமிழ் இலக்கியத்தில் முக்கியப் போக்காகும். இக்குழுவினர் தோற்றுவித்த சிற்றிதழ் மரபு, அழகியல் கொள்கைகள், தமிழ்ச் சூழலில் உருவாக்கிய மாற்றங்கள் பன்முகத் தன்மையுடையவை. இவற்றை நவீனத்துத் திறனாய்வுகளாக அவதானிக்க முடியும். புதுத் திறனாய்வு, உருவவியல் வாதம், இருத்தலியல் வாதம், மிகைநடப்பியல், உளவியல்வாதம் ஆகியவை படைப்பில் பெரிதும் வெளிப்பட்டன. இருபதின் பிற் பகுதியில் நவீன இலக்கியத்தின் அடிப்படைகளைத் தீர்மானித்ததில் நவீனத்துவப் படைப்பாளிகளின் பங்களிப்பு முதன்மையானது. இக்கட்டுரை அவற்றை முன்வைத்து உரையாடுகிறது.

## நவீனத்துவமும் தொடக்ககாலத் திறனாய்வுப் போக்குகளும்

நவீனத்துவம் என்பது இருபதாம் நூற்றாண்டில் உலகு தழுவிய கலை இலக்கிய இயக்கம். தனிமனித அனுபவவாதத்தை முன்வைத்து ஓவியம், சிற்பம், கவிதை, கதைகள் எழுதப்பட்டன. இதை முன்வைத்து இயங்கிய படைப்பாளிகளை நவீனத்துவப் படைப்பாளிகள் என்று அழைப்பர். தமிழில் சுதந்திரத்திற்கு முன்பு வரை இயங்கிய படைப்பாளிகள், சுதந்தரத்திற்குப் பின்பு இயங்கிய படைப்பாளிகள் என இரண்டு நிலையில் இவர்கள் தகவமைந்திருப்பதை அவதானிக்க முடியும். பாரதி, வ.வே.சு. ஐயர், புதுமைப்பித்தன், க.நா.சுப்ரமணியம், ந. பிச்சமூர்த்தி, மௌனி, கு.ப.ராஜகோபாலான் போன்றோர் தொடக்ககால நவீனத்துவப் படைப்பாளிகள் எனலாம். பதினெட்டின் பிற்பகுதியில் வந்த விவேக சிந்தாமணியில் நாவல் எழுதும் முறை, அதன் வடிவம், தமிழின் தொடக்ககால நாவல் குறித்த பதிவுகள் வெளிவரத் தொடங்கி விட்டன. அதாவது, நவீன இலக்கிய விவாதம் விவேக சிந்தாமணியிலே தொடங்கி விட்டது. அது மணிக்கொடி, சுதந்தரச் சங்கு ஆகிய இதழ்கள் வழியாகக் காத்திரமான உரையாடல்களை முன்னெடுக்க அடுத்த கட்டத்திற்கு நகர்ந்தது.

வ.வே.சு. ஐயர்(1881-1925) பல மொழிகள் அறிந்தவர். உலக முழுவதும் காணப்படும் செவ்விலக்கியங்களில் பரிச்சயம் உள்ளவர்.

சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு பெல்லாரி சிறை செல்ல, அங்குக் கிடைத்த தனிமையில் புத்திலக்கியங்களையும் ஆய்வுகளையும் முன்னெடுக்கத் தொடங்கினார். கற்பனை, உணர்ச்சி, வடிவம் போன்றவற்றைக் கவிதையின் முக்கிய குணாம்சங்களாகக் கருதியவர். இவற்றைநாம் அவரது கண்ணன் பாட்டு, மறுமலர்ச்சி கவிதை, கம்பராமாயண ரசனை போன்ற கட்டுரைகளில் காணலாம். "ஒரு நூலை மதிப்பிடுவது என்றால் அதில் உள்ள குணம் குறை இரண்டையும் பார்ப்பது என்பது எனக்குத் தெரிந்தமட்டில் வ.வே.சு. அய்யருடன்தான் தமிழில் ஆரம்பிக்கிறது (தமிழில் இலக்கிய விமர்சனம், ப.13) என்கிறார் சி.சு. செல்லப்பா". வ.வே. சு. வின் கம்பராமாயணம் ஓர் ஆய்வு(A study of Kamba Ramayana-1921) என்ற நூல் தமிழ்த் திறனாய்வு உலகிற்குப் பல முன்மாதிரிகளை உள்ளீடாகப் பெற்றுள்ளது. "பலமுறை கம்பனைக் கற்றாலும் அறிய இயலாத அரும் பொருள்களை நமக்கு வழங்குகிறது" என்பர் அ.ச.ஞானசம்பந்தன் (இலக்கியக் கலை, ப.28). வ.வே.சு., கம்பனை வால்மீகி, மில்டன், ஹோமர், தாந்தே, வியாசர் ஆகியோருடன் ஒப்பிட்டு விளக்கியுள்ளார். தமிழில் ஒப்பீட்டுத் திறனாய்வின் முன்னோடியாகத் திகழ்கிறார். தமிழ்ச் சிறுகதைக்குத் தந்தையான அவர் தமிழ் இலக்கிய விமர்சனத்துக்கும் தந்தை (மேலது.ப.15) என்று சி.சு.செ.வும், தமிழிற்கான திறனாய்வு வ.வே.சு ஐயருடன் தோன்றியதை மறுக்க இயலாது" என்று தமிழவனும் (வித்யாசம், 3 & 4, 1995, ப.6) கூறுவதிலிருந்து வ.வே.சு. வின் திறனாய்வுப் பார்வை புலப்படுகிறது. வ.வே.சு ஐயரின் ஐரோப்பிய இலக்கிய மரபின் தாக்கமும் இந்தியத் தத்துவார்த்த தளத்தின் பின்புலமும் ஒப்பீட்டு முறைத் திறனாய்வில் பல புதிய தொடக்கங்களைச் சாத்தியப்படுத்தின.

சி.சுப்பிரமணிபாரதியின் (1882 – 1921) இலக்கிய ஆளுமைகளில் கவிதை பற்றிய கொள்கைகளைக் காணமுடிகிறது. சொல் புதிது, பொருள் புதிது.....பாட்டுத் திறத்தாலே....அக்னி குஞ்சு...போன்ற சொல்லாடல்கள் கவியின் சமூக ஆக்கத்திற்குப் பயன்பட அவாவுகிறது. சமூக மாற்றத்திற்கு இலக்கியம் பயன்படவேண்டும் எனும் பயனீட்டுக் கொள்கை முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. "கவிதை எழுதுபவன் கவியன்று, கவிதையையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையையே கவிதையாகச் செய்வதுதான் அவனே கவி (பாரதியார் கட்டுரைகள், வானதி பதிப்பகம், 1981, ப.200) என்கிறார் பாரதி.

பாரதி, வ.வே.சு. ஆகியோருக்குப்பின் மணிக்கொடியும் சுதந்திரச் சங்கும் 1930களில் புதிய விமர்சன மரபுகளைத் தொடங்கி வைத்தன. "மணிக்கொடி பறக்கவும் சுதந்திரச் சங்கு முழங்கவும் ஆரம்பித்த பிறகுதான் இலக்கிய விமர்சனத்துக்கு ஒரு புதிய ஆரம்பம்ஏற்பட்டது (சி.சு.செ., தமிழில் இலக்கிய விமர்சனம், ப.22) மணிக்கொடிப் படைப்பாளிகள் சிறுகதை, நாவல், புதுக்கவிதை போன்றவற்றின் இலக்கணங்களை வரையறுக்க முற்பட்டுள்ளனர். புதுமைப்பித்தன், பெ.கோ. சுந்தர்ராஜன், ந.சிதம்பரசுப்பிரமணியம், ச.து.சு. யோகியர் புத்திலக்கியங்கள் குறித்து தங்களின் மதிப்பீடுகளைத் தொடர்ந்து எழுதி வந்திருக்கின்றனர். பின்னர் சரஸ்வதி இதழும் இந்தப் பணிகளைசெய்யத் தொடங்க இலக்கியம் பற்றிய உரையாடல்கள் நவீனத்துவக் கோட்பாடுகளை மையமிட்டு நகரத் தொடங்கின. கு.ப.ரா., மேற்கின் ரொமாண்டிசிசத்தை ஏற்றுக் கொண்டு எழுத ஆரம்பித்தார். புதுமைப்பித்தன் புரணங்கள் மறுவாசிப்பு, சாதி, மத மையக் கதையாடல்களைக் கேள்விகேட்டு சமூக விமர்சனத்தை லாவகமான மொழியால் எடுத்துரைக்க ஆரம்பித்தார். மௌனி உளவியல்வாத நெருக்கடிகளை அனுபவவாதமாகப் படைக்க, ந. பிச்சமூர்த்தி அறிவுவாத மரபைக் கவிதைகளாக மாற்ற என நவீனத்துவத்தை மையமிட்டுப் பார்வைகள் உருவாக்கப்படலாயின. புதிய இலக்கியங்கள் அறிமுகம் செய்தல், விளக்குதல், ஒப்பிடுதல், மதிப்பிடுதல் என்ற தளங்களில் விமர்சனம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பல்வேறு விவாதங்களும்

இங்கு முக்கியமானவை. புதுமைப்பித்தன், கல்கி இடையே நடந்த விவாதங்கள், புதுமைப்பித்தன், க.நா.சு இருவருக்கும் நடைபெற்ற விவாதங்கள், பு.பி. ரசமட்டம் என்ற தலைப்பில் எழுதி வந்த விமர்சனக் குறிப்புகள் திறனாய்வை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தின. “புதுமைப்பித்தன் கட்டுரைகள்“ எனும் தொகுப்பு புதுமைப்பித்தனின் விமர்சன அணுகுமுறைகளை வெளிப்படுத்துபவை. கு.ப.ரா, வ.ரா., சங்கு சுப்ரமணியம் போன்றோரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. 1937இல் கு.ப.ரா.வும் சிட்டியும் இணைந்து எழுதிய ‘கண்ணன் என் கவி’ என்ற சிறு நூல் பாரதியின் கவித்திறத்தை மேலைக் கவிஞர்களுடன் ஒப்பிட்டுப் பேசுகிறது. கு.ப.ரா. கற்பனாவாதம், உளவியல், நடப்பியல் போன்ற அணுகுமுறைகளைப் படைப்பிலும் விமர்சனத்திலும் பின்பற்றியவர்.

‘கருவுக்கும் உருவுக்கும் இடைப்பட்ட சப்த தாதுக்கள்’ என்னுடைய படைப்புகள் (வழித் துணை) என்று கூறும் ந.பிச்சமூர்த்தி அறிவுவாதக் கூறுகளைக் (Rationalism), கவிதைகளில் பயன்படுத்தியதோடு, அவை தொடர்பான விளக்கங்களும் அளித்து வந்துள்ளார். ‘ந.பிச்சமூர்த்தி கட்டுரைகள்’ கவிதை தொடர்பான விமர்சன நெறியைக் காட்டுகின்றன. இந்தியா சுதந்திரமடையும் வரை இவர்கள் உருவாக்கிய படைப்புப் பற்றிய மதிப்பீடுகள் திறனாய்விற்குப் பல அடிப்படைகளைத் தந்தன. அழகியல் வாதத் திறனாய்வுக் கொள்கைகளாக அவற்றை நாம் கருதமுடியும். இதில் க.நா.சு.வின் பங்களிப்பு அளப்பறியது.

**க.நா.சுப்ரமணியமும் மனப்பதிவு முறையும்**

க.நா.சுப்ரமணியத்தின் விமர்சனப்பயணம் தமிழில் ஒரு திருப்பம். அவர் உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களை அறிமுகம் செய்தல், மொழி பெயர்த்தல், சிறந்த நூல்களின் பட்டியல் தருதல், படைப்பாக்கம் எனப் பல தளங்களில் இயங்கியவர். படித்திருக்கிறீர்களா? 1,2,3, உலகத்துச் சிறந்த நாவல்கள், சிறந்த பத்து இந்திய நாவல்கள், என்று இவர் எழுதிய நூல்களின் பட்டியல்கள் விரியும். க.நா.சு. 'உலக இலக்கிய வளத்தை அனுபவமாக', 'விமர்சனத்தை ஒரு கலையாகப் பாவித்து “படைப்புத் திறனின் ஜீவ ஊற்று விமர்சனம்“ என்பதை நிலைப்பாடாக முன்னெடுத்தாக சுந்தரராமசாமி (பாலா, (தொ.ஆ.). தமிழ் இலக்கிய விமர்சகர், ப.20) கருதுகிறார். இது உண்மையும் கூட. க.ந.சு., அவர் தான் படித்த நூல்களை மனதில் இறுத்தி, கலையின் உச்சபச்ச சாத்தியங்களை அடிப்படையாகக் கொண்டு மனப்பதிவு முறையில் விமர்சனத்தை முதன்மைப்படுத்தி இயங்கியவர். இது அன்றையச் சூழலில் புதிய மரபாகக் கொள்ளப்பட்டது. விமர்சனத்திற்காக இலக்கிய வட்டம், இராமபாணம், சூறாவளி, சந்திரோதயம் போன்ற இதழ்களையும் நடத்தியுள்ளார். 1950களில் ஹிந்து ஆங்கில நாளிதழில் இவர் எழுதி வந்த ‘மதிப்புரைகள்' விமர்சனத்திற்கு முன்னுதாரணமானவை. “தரம், சர்வதேச தரம், அகதரிசனம் ஆகியவற்றை இலக்கிய மதிப்பீடாக முன் வைத்த கா.நா.சு.விடம் ஆத்மஞானப் பார்வை இலக்கிய விமர்சனத்தின் பார்வையாகக் காணப்படுவதாகத் தமிழவன் கருதுகிறார்.” (இருபதில் நவீனத் தமிழ் விமர்சனங்கள், ப.239) 1940இல் தொடங்கி 1988 வரை தொடர்ந்து இலக்கியத்தில் தனது எதிர்வினையை ஆற்றியுள்ளார். ஒரு படைப்பைத் தமிழில் விமர்சிக்கும்போது சிறப்பாகவும், ஆங்கிலத்தில் விமர்சிக்கும்போது எதிர்மாறாகவும், நூல்களின் தரப்பட்டியலை எழுதி அவரே மாற்றுவது, அதிர்ச்சி மதிப்பிற்காகப் பரபரப்பைத் தூண்டும் விமர்சகர்" போன்ற குற்றச்சாட்டுகளும் வைக்கப்பட்டன (தி.க.சி, தி.க.சியின் திறனாய்வுகள், ப.324). 'திருக்குறள் இலக்கியமே அல்ல, பேராசிரியர்கள் தமிழுக்குச் செய்திருக்கிற பாவங்கள் ஏழேழு ஜென்மங்களுக்கும் தொலையாது, தமிழில் இலக்கிய விமர்சனம் இல்லை, இதுமாதிரி அபிப்ராயங்களையே கூறிவந்திருப்பதாகக் கைலாசபதி" குறிப்பிடுகிறார். (திறனாய்வுப் பிரச்சினைகள், ப.8). சி.சு.செ.,வை

‘அலசல்' என்றும் க.நா. சு. வைக் 'குத்துமதிப்பு (காற்றில் கலந்த பேரோசை, ப.83) 'இலக்கிய சிபாரிசுக்காரர்' (காற்றில் கலந்த பேரோசை, ப.77) என்றும் இன்னொரு இலக்கியவாதியான சு.ரா. கிண்டல் செய்கிறார். மார்க்சியவாதிகளை எதிர்த்தல், வணிக எழுத்துக்களைத் தாக்குதல், பண்டிதர்கள் மீது பாய்ச்சல் எனத் தனது விமர்சன அணுகுமுறையை எதிர்மறையாகவே வளர்த்தவர். “முறையான எதிர்ப்புகளைச் செய்திருந்தால் க.நா.சு. தமிழில் எதிர்நிலைத் திறனாய்வாளராக' உருவாகியிருக்க முடியும்“ என்ற க. பஞ்சாங்கத்தின் மதிப்பீடு (தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, ப.79) பொருத்தமுடையதே.

விவாதங்கள் இப்படி இருந்தாலும் க.நா.சு.வின் நேர்மறையிலோ, எதிர்மறையிலோ தமிழ்த் திறனாய்வு பல தளங்களுக்குத் தகவமைக்கப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. அவரது 'விமர்சனக்கலை' (1959), 'இலக்கிய விசாரம்' (1959), 'இலக்கியத்துக்கு ஓர் இயக்கம்' (1985), 'இலக்கிய வளர்ச்சி' (1986), 'கலை நுட்பங்கள்' (1988) முதல் ஐந்து தமிழ் நாவல்கள், இந்திய இலக்கியம் போன்ற நூல்கள் தமிழ்த் திறனாய்வு வளர்ச்சியில் முக்கியமானவை. படைப்பின் நேர்த்தி, அழகியல், வடிவம் சார்ந்து தமிழ்ச்சூழலை விமர்சனத்தாலும் ஒப்பீட்டு முறைகளாலும் நவீனப்படுத்தியவர். தமிழ் நாவல்கள் சர்வதேச நாவல்களுக்கு இணையாக வரவேண்டும் என்ற கனவை நனவாக்க விமர்சனத்தைக் கருவியாகக் கொண்டு செயல்பட்டவர். அதைப் பொய்த்தேவு, பித்தப்பூ, ஒருநாள் போன்ற நாவல்கள் வழியாக முயற்சித்து முன் மாதிரிகளை உருவாக்கியவர்.

### சி.சு.செல்லப்பாவும் எழுத்தின் பங்களிப்பும்

சி.சு.செ.வால் தொடங்கப்பட்ட 'எழுத்து' (1959-1972) பத்திரிக்கை விமர்சனத்திற்கு முக்கியத்துவம் தந்து, தமிழில் இலக்கியத் திறனாய்வும் புதுக்கவிதையும் தனித்து வளர மிகப்பெரும் இடம் தந்தது. எழுத்துவிற்கு முன் தமிழ்த் திறனாய்வு, எழுத்துவிற்குப் பின் தமிழ்த் திறனாய்வு என்று பகுத்து ஆய்வு செய்யும் அளவிற்கு 1959 முதல் 1972 வரை திறனாய்வுப் போக்கில் பல்வேறு மாற்றங்களைச் செய்தது. சிற்றிதழ் வரலாற்றில் தீவிர இலக்கியத்தைக் காத்திரமாகத் தொடங்கி வைத்து 'எழுத்து'. “நிறை குறை இரண்டையும் எடுத்துக்காட்டும் ஒரு கருத்து ஓட்டப் போக்கே விமர்சனம் ஆகும் இந்த அடிப்படையில் தான் எழுத்து இயங்கும்” என்ற சி.சு.செ.வின் அறிவிப்பிற்கு (முதல் இதழ்) ஏற்றாற்போல் பத்து வருடங்களுக்கு மேல் செயல்பட்டது. எப்.ஆர்.லீவிஸின் ஸ்க்குருடினி (scrutiny) பத்திரிக்கையின் தாக்கத்தில் எழுத்து இயங்கியது. இவ்வியக்கம் தமிழ்த் திறனாய்வுச் சூழலில் அமெரிக்கப் புதுத் திறனாய்வு' (New criticism) முறைகள் பரவக் காரணமாக அமைந்தன. இலக்கியங்கள் அதன் உள்ளடக்கம் வடிவம், மொழி, எடுத்துரைப்பு, கச்சிதமான உருவம் விவாதித்ததோடு, படைப்புகள் கூர்ந்து வாசிப்பதன் அவசியமும் முன்வைக்கப்பட்டது.

சி.சு.செல்லப்பா (1912-1998), விமர்சனச் சட்டகங்களைத் தமிழில் விரிவுபடுத்தி, பகுப்பாய்வுத் திறனாய்வுமுறையைப் (Analytical criticism) பெரிதும் பின்பற்றியவர். இவருடைய, தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது (1974), மௌனியின் கதைகள், மணிக்கொடிச் சிறுகதை முதல்வர்கள், ஊதுவத்திபுல் போன்ற நூல்களிலும் பிற கட்டுரைகளிலும் பகுப்பாய்வு அணுகுமுறையை அறிய முடிகிறது, திறனாய்விற்காகவே 'எழுத்து', 'இலக்கிய விசாரம்', 'பார்வை', 'சுவை'(1985), போன்ற இலக்கிய இதழ்களை நடத்தியவர். மிகு உணர்ச்சி இயல், நடப்பியல், மிகை நடப்பியல், அமைப்பியல் போன்ற புதிய முறையியல்களைப் பற்றி விமர்சனரீதியில் படைப்பியல் (1993) என்ற நூலை எழுதியுள்ளார். “கதைகள் கவிதை நிரம்பியதாய் ரஸா பாவபேதமாய் இருக்க வேண்டும்“ என்கிறார் சி.சு.செ.. திறனாய்வு வரலாற்றைத் ‘தமிழில் இலக்கிய விமர்சனம்' (1974) என்ற தலைப்பில் எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூலில் சி.சு.செ., தொல்காப்பியம் இலக்கண நூல் என்றும், பாரதியின் திறனாய்வை மறுப்பதும்,

மேற்கைப் பின்பற்றுவதையும் காணமுடிகின்றது. சி.சு.செ. வின் 'அலசல் திறனாய்வு' முறையைக் "கடந்த 30 வருடமாக அரைத்த மாவையே அரைத்து வருகிறார்" என்று க.நா.சு. விமர்சித்திருக்கிறார்.

இலக்கியவாதிகள் திறனாய்வுக்குழு மேற்கின் திறனாய்வு முறைகளை அதிகம் பின்பற்றியதுடன் அழகியல் பண்புகளை மையப்படுத்தி படைப்பில் இயங்கியுள்ளது. குறிப்பாக மேற்கில் எஃப்.ஆர். லீவிஸ் (F.R. Lewis) ரிச்சர்ட்ஸ் (Richards) ஆலன்டேட் (Allen date), கிளியன்த் புரூக் (Cleanth Brollks), வில்லியம் எம்ப்ஸன் (William Empson), டி.எஸ். எலியட் (T.S.Eliot), நார்த்ரோப் பிரை (Northropfrey)போன்றோர் நவீனத்துவத் திறனாய் வாளர்களாக, திகழ்ந்தனர். தமிழகத்திலும் க.நா.சுப்ரமணியம், சி.சு.செ., வெங்கட்சாமிநாதன், பிரமிள், சுந்தரராமசாமி போன்றவர்களை நவீனத்துவத் திறனாய் வாளர்களாக அடையாளப்படுத்த முடியும். சுதந்திரத்திற்குப் பின் நவீனத்துவம் தனது எல்லைகளை விரிவுபடுத்தியது. ஆ.மாதவன், நகுலன், அசோகமித்திரன் போன்றோரின் காகிதமலர்கள், நினைவுப்பாதை, தண்ணீர் ஆகிய படைப்புகள் வெளிவந்தன. சுந்தரராமசாமியின் ஜே.ஜே. சிலகுறிப்புகள் நவீனத்துவத்தின் முதன்மையான நாவல் என்று சொல்லும்படியாக வடிவம், எடுத்துரைப்பு, மொழி, செய்நேர்த்தி என அமைந்திருந்தது. இந்தப் பின்புலங்களில் விமர்சனம் நகர்ந்தது.

## வெங்கட்சாமிநாதனும் உள்வட்ட அணுகுமுறையும்

"கலைச் சீரழிவுக்கு எதிரான ஒரு விமர்சன ஆளுமையைக் க.நா.சு. காட்ட சாமிநாதனின் கருத்துக்கள் சீரழிவின் பூதாகாரத் தன்மையையே காட்டி அதிர்ச்சி கொள்ளச் செய்தன" என வெங்கட்சாமிநாதனின் அணுகுமுறையைக் குறிப்பிடுகிறார், சுந்தரராமசாமி (வெ.சா. - ஓர் எதிர்ப்புகுரல் - வெங்கட்சாமிநாதன், முன்னுரையில், ப.4). இலக்கியங்களை நாடகம், சினிமா, சிற்பங்கள், ஓவியங்கள் எனப் பிற கலைகளோடு ஒப்பிட்டுத் திறனாய்வு செய்ததில் வெங்கட்சாமிநாதனின் அணுகுமுறை கவனிக்கத்தக்கது. தனது கடும் விமர்சனத்தால் தமிழ் இலக்கியச் சூழலைப் பரபரப்பாக வைத்திருந்தவர். கலையை அருள் செயலாகவும் தரிசனமாகவும் மெய்யறிவாகவும் தத்துவார்த்த சிந்தனாமுறையின் வெளிப்பாடாகவும் பாவித்தவர் வெங்கட்சாமிநாதன். கலை என்பது தன்னைக் கண்டடைதல், உண்மையை அடைதல், உன்னதத்தைத் தேடுதல் போன்ற உள்வட்ட அணுகலைப் பயன்படுத்தி இலக்கியத்தைத் தரப்படுத்துவது, புனிதப்படுத்துவது (canon) எனும் முறையியலைப் பின்பற்றியதாக விமர்சிக்கப்பட்டார். "நல்லார்க்கு நல்லால்லேன்னு சொல்றது விமர்சனம்" எனும் வெ.சா., 2000 வருடத் தமிழ் இலக்கிய மரபை பாலைவனமாகத் தான் பார்க்கிறார். இங்கு நடந்த இலக்கிய முயற்சிகள் அவருக்கு வறட்சியையே காட்டுகின்றன. கலாப்ரியாவின் கவிதைகளைத் 'தித்திக்கும் திருட்டு மாம்பழங்கள்' என்றும், 'க.நா.சுவும் கோவிந்தாக்களும்' என்றும் விமர்சனத்தினைப் பகடியாகவும் பயன்படுத்தியதுண்டு. இவரது பாலையும் வாழையும், ஓர் எதிர்ப்புக்குரல் (1978), அன்றைய வறட்சியிலிருந்து இன்றைய முயற்சி வரை (1985), இலக்கிய ஊழல்கள், மார்க்சின் கல்லறையில் இருந்து ஒரு குரல் போன்ற நூல்கள் பரபரப்பை ஏற்படுத்தியவை. 'ப்ளாக் மெயில்காரர், இலக்கிய ரௌடி', இலக்கியத்திற்குக் காவிச்சாயம் ஏற்றிக் கற்பு நெறி கட்டுகிறவர் (வல்லிக்கண்ணன், தமிழ் இலக்கிய விமர்சகர்கள், ப.39), "விமர்சனம் செய்யும்போது குழாயடிக் குப்பம்மா போல் குஸ்தியில் இறங்குபவர்" (சு.சண்முகசுந்தரம், எழுபதுகளில் கலை இலக்கியம், ப.137) போன்ற விமர்சனங்கள் வெங்கட் சாமிநாதன் மீது இருந்தாலும், தத்துவம், நாடகம், நுண் கலைகளான சிற்பம், ஓவியம் போன்றவற்றை இலக்கியத்திற்குள் பொருத்தி அதன் உட்பிணைப்புகளையும் நுண் சித்திரிப்புக்களையும் விமர்சனத்தில் அணுகுமுறையாகப் பயன்படுத்தியதில் தனித்தன்மையுடையவர். இலக்கியக் கலையையும்

நுண் கலைகளையும் இணைத்து விமர்சிக்கும் மரபைத் திறனாய்விற்குக் கொண்டு வந்தவர். பிற்காலத்தில் இந்திரன் போன்றவர்கள் இதை அடுத்த தளத்திற்கு விரிவு செய்தார்கள். இந்திரனின் 'தமிழ் அழகியல்' இலக்கியத்தைக் கலைகளுடன் ஒப்பிட்டு விவாதித்த ஒரு நூல்.

### பிரமிளும் அழகு உருவவியல் பார்வையும்

பிரமிள் (1939-1997), 'எழுத்து' இதழில் அறிமுகமானவர். மிகக் கறாரான விமர்சனத்தைத் தமிழ்ச் சூழலில் முன் வைத்ததுடன், சமரசம் கொள்ளாத தன்மை, தயவு தாட்சன்யமின்றி படைப்புகளை விமர்சிப்பது, எழுத்துக்களைத் தனது வாசிப்பனுபவத்திற்கேற்ப ஒப்பிட்டு விமர்சிப்பது இவரது தனித்திறன். ஒருவகையில் தத்துவத்தேடலோடு நெருங்கியது இவரது விமர்சனப் பயணம் எனலாம். ஆன்மீகத்தையும் இந்து, தத்துவ மரபுகளையும் இணைத்து விமர்சனத்தில் பயன்படுத்தியவர். 'அழகியல் ரீதியிலான அனுபவத்தைச் சொல்லும் ஒரு தோரணையாக விமர்சனத்தை மாற்றிச் சுயமான விமர்சன சித்தாந்தத்தை உருவாக்கிக் கொடுத்தவர்" (காலப்ரதீப் சுப்ரமணியன், தமிழின் நவீனத்துவம்,ப.8). இவற்றைப் பிரமிளின் தமிழின் நவீனத்துவம் - எழுத்துக் கட்டுரைகள் (1988), விமர்சன ஊழல்கள் (1982) விமர்சன மீட்சிகள் போன்ற நூல்களில் காணமுடிகிறது. மேலும், பிரமிளின் விமர்சனப் பார்வை அதீதத்தை அழகிய ஆன்மரீதியில் காட்டுகிறது. அவரது பார்வையை Archetypal Metaphysical 'ஆழ்ந்த ஆன்மரீதியான விஷயங்களைப் படைப்பில் இனங்காணல் ஆனது, கூடவே உருவவியல் பார்வையும் அவரிடம் இருந்தது என்ற காலப்பிரதீப்சுப்பிரமணியன் கருத்து (மேலது,ப.9) பொருத்தமுடையதே.

### சுந்தரராமசாமியும் இலக்கிய உன்னதமும்

தமிழ்ச் சூழல் தந்த விசேசமான மூச்சுத் திணறலுக்கு ஒரு படைப்பாளி தர நேர்ந்த ஒழுங்கற்ற எதிர்வினைகள் (காற்றில் கலந்த பேரோசை.ப.11) எனத் தனது விமர்சனம் பற்றிக் குறிப்பிடும் சுந்தரராமசாமி, க.நா.சு.வின் தூண்டுதலினால் விமர்சனத்தில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுகிறார். படைப்பின் ஆழம், படைப்பாளியின் உழைப்பு, படைப்புக் கலைக்குத் தமிழ்ச் சூழலில் வழங்கப்படாத அங்கீகார மறுப்பு, தமிழர்களின் வாழ்வியல் நிலை, வணிக எழுத்துக்களின் தாழ்ந்த செயல்பாடுகள், சமூகம், பண்பாடு போன்ற இலக்கியமற்ற பொதுக்களன்கள் குறித்த மனித அக்கறை, மனித சுதந்திரம், பண்பாட்டுச் சீரழிவு ஆகியன பற்றிய தனது நிலைப்பாடுகளைத் தீவிரமாக 1960களிலிருந்து தொடர்ந்து பகிர்ந்து வந்துள்ளார். கலையையும் கலைஞனையும் முதன்மைப்படுத்திச் சமூகத்தைப் பார்க்கிறார். அது பிறரைக் கண்காணிப்பதோடு தொடர்புடையது என்கின்றனர் பிரேம், ரமேஸ். பாரதி, ஆத்மாநாம், தஸ்தாவெஸ்கி போன்றவர்களின் எழுத்துக்களை விரிவாக எழுதியதோடு இளம் படைப்பாளிகளையும் புதிய இலக்கிய ஆக்கங்களையும் கூர்ந்து அவை பற்றிய தனது மதிப்பீடுகளை சு.ரா. வெளிப்படையாகப் பகிர்ந்து கொண்டுள்ளார். இலக்கியவாதிகள் திறனாய்வுக் குழுவில் சு.ரா.விடம் சமூகத்தில் இலக்கியத்தின் உன்னதத்தையும் கலைஞனின் உயர்ந்த பண்புகளையும் அவனது சமூக அக்கறையையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார். பாரதி சக்திப் பிழம்பான ஒரு கலைஞன், ஆத்மாநாம் பிரஞ்ஞைப் பூர்வமான கவிஞர், புதுமைப்பித்தன் எழுத்தை ஆத்மார்த்தமாகக் கையாண்டவர் போன்ற சொற்றொடர்கள் ஒரு வகையான உள்வட்ட அணுகலின் வெளிப்பாடாக விமர்சிக்கப்பட்டது. புனைவு மொழியையும் கவிதை உருவகங்களையும் திறனாய்வு மொழியாகப் பயன்படுத்தியதால் சு.ரா.வின் விமர்சனங்கள் ஈர்ப்புடையவையாக அமைந்திருந்தன. திறனாய்வில் படைப்பின் எல்லையை சு.ராவின் மொழி விஸ்தரித்தது என்றால் அது மிகையல்ல. "சு.ரா.வின் விமர்சனமும் ஒரு வித புனைவியல் தன்மை உடையது, Fatherly behavior" என்று எஸ். ராமகிருஷ்ணனும் (காலச்சுவடு, இதழ்24, ப.70), 'பாட்டியம்மாள் விமர்சனம்' என்று

சாருநிவேதிதாவும் (க.பஞ்சாங்கம், தமிழ் இலக்கியத்திறனாய்வு வரலாறு, ப.89) குறிப்பிடுகின்றனர். என்றாலும் சுந்தரராமசாமியின், ந. பிச்சமூர்த்தி: கலைமரபும் மனிதநேயமும், காற்றில் கலந்த பேரோசை, விரிவும் ஆழமும் தேடி, இவை என் உரைகள், நினைவோடை 1,2,3,4, இறந்த காலம் பெற்று வரும் உயிர் போன்ற நூல்கள் அவரது இலக்கியப் பார்வைகளை, சு.ரா.வின் படைப்பியல் வழிப்பட்ட விமர்சன ஆளுமையைக் காட்டுபவை. இலக்கியத்தை அதன் தரம் சார்ந்து கறாராகவும் நுட்பமானவையாகவும் அணுகியவர் சு.ரா.

க.நா.சு. ஒரு நேர்காணலில் தனக்கு "மேற்கத்திய பாதிப்பும், இந்திய மரபின் தாக்கமும் உண்டு", (க.நா.சு. இலக்கியத்தடம், ப.103) என்றும் "வெங்கட்சாமிநாதன் வைதீகமான சாஸ்திரிகளுடைய புதல்வர் அதனால் அவரிடம் மரபுப்பார்வை வலுவாக இருக்கும்" (மேலது, ப.115) என்றும் கூறியுள்ளார். நவீனத்துவ விமர்சனத்தை முதன்மைப் படுத்திய க.நா.சு, வெ.சா., பிரமிள், ஆகியோர் விமர்சனத்தை தத்துவார்த்த தளத்துள் வைத்து அணுகியுள்ளனர். "கதைகளைக் கவிதை நிரம்பியதாய் ரஸா பாவ பேதமாய்ச் சி.சு.செ. பார்ப்பது (ரஸம் - வடமொழிக் கோட்பாடு) நவீனத்துவப் படைப்பாளிகளின் சமஸ்கிருதமயமாதல் பண்புகளையும் க.நா.சு. பயன்படுத்தும் உலகத்தரம், உலகப் புகழ் வாய்ந்த படைப்பு போன்ற சொற்கள் இக்குழுவின் மேற்குமயமாதல் பண்புகளையும் காட்டுகின்றன. "திராவிடக் கருத்தியலையும் இடதுசாரிக் கருத்தியலையும் தாண்டிச் செல்ல சமஸ்கிருதமயமாக்கமும், மேற்குமயமாதலும் இவர்களுக்கு உதவியுள்ளன" என்று விமர்சிக்கும் ந.முத்துமோகன், அதிகாரம் நோக்கிய நகர்வு" (மதிவாணன்,பா, தமிழ் இனி, ப.759) என மதிப்பிடுகிறார்.

ஜெயகாந்தன், நீலபத்மநாபன், அசோகமித்திரன், எம்.வி.வெங்கட்ராம், போன்றவர்கள் இலக்கியம் பற்றிய தங்களது பார்வைகளைத் தங்கள் எழுத்துப் பயணத்தின் ஊடாகப் பதிவு செய்துள்ளனர். இவர்கள் பெரும்பான்மையும் இலக்கியத்தின் வளர்ச்சி, அதன் சமூகத் தேவை, அதன் ஆழம், தரம் போன்றவை குறித்து அதிகம் பேசி வந்துள்ளனர். நகுலன், ஜெயகாந்தன் ஆகிய இருவரிடம் மட்டுமே கோட்பாடுகளோடு நெருங்கி வரக்கூடிய திறனாய்வுப் பார்வைகள் உள்ளன. நகுலனிடம் மேற்கத்திய வடிவப் பார்வையும் இந்திய மரபான எண்ணங்களும் கலந்து மயங்கி வருவதுண்டு. உளவியல் பிறழ்வுகளைப் படைப்பிலும் படைப்புத் தொடர்பான விவாதங்களிலும் காணமுடியும். கவிதை, நாவல் தொடர்பான சோதனை வடிவிலான விமர்சனக் கூறுகள் இவரது படைப்புகளிலும் கட்டுரைகளிலும் வெளிப்படுகின்றன. அது Metaphysical தன்மையுடன், தத்துவார்த்த கூறுகளுடனும் இருக்கிறது. ஜெயகாந்தனிடம் இந்தியவியல், மார்க்சியம், திராவிடயியம் ஆகிய பார்வைகள் வழிப்பட்ட இலக்கிய மதிப்பீடுகளை அவரது முன்னுரைகள், கலை இலக்கியவாதியின் இலக்கிய அனுபவங்கள் போன்ற நூல்கள் வழி தொகுக்கலாம். அவரது விமர்சனக் கோட்பாட்டை இந்திய முற்போக்கு அழகியலாகக் கருத இடமுண்டு.

## தொகுப்புரை

- நவீனத்துவ திறனாய்வுக் குழுவில் முற்றிலும் படைப்பையும் படைப்பாளியையும் மையமாக வைத்து இலக்கிய மதிப்பீடுகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. படைப்பு, உள்ளொளியாக, தரிசனம் மிகுந்ததாக உயர்நிலையில் வைத்து விளக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் 'அழகியல் அணுகுமுறை' முக்கிய இடத்தை வகித்துள்ளது. மேற்கின் ரொமாண்டிஸமும், உருவவியல் வாதமும் (இங்கு இரசனை முறைத் திறனாய்வு), அமெரிக்கப் புதிய விமர்சனமும் இலக்கிய மதிப்பீடுகளில் பிரதிபலித்துள்ளன.
- புனைவுகளில் இருத்தலியல், உளவியல், அதிகமாகப் பின்பற்றப்பட, கவிதைகளில் மிகை நடப்பியல், அரூபவியல், படிமவியல் பெரிதும் காணப்படுகிறது. இந்தப்

பின்புலங்களில் இவர்களின் விமரசன மரபும் அமைந்துள்ளன.

- திறனாய்வில் படைப்பாளியின் குரல் ஓங்கி ஒலிக்க, அவனே பிரதான இடத்தையும் பிடிக்கிறான். மரபுவழிப்பட்ட திறனாய்வுக் கூறுகளைப் பயன்படுத்த இவர்கள் தவறியிருக்கின்றனர். இது இடைவெளியை ஏற்படுத்தியதால் தமிழ்த் திறனாய்வு இன்று வரை மேற்கை எதிர்நோக்கி இருக்க வேண்டிய சூழலை ஏற்படுத்தியுள்ளது. அய்யப்பப் பணிக்கர் தொல்காப்பியத் திணைக் கோட்பாடைப் பின்பற்றி வெஸகல் நாவல்களை அணுகியது இங்குக் கண்டு கொள்ளப்படவில்லை. இக்குழு பெரும்பாலும் மேலைக் கோட்பாடுகளையும் வடக்கின் சார்பையும் பின்பற்றியுள்ளது. இப்பின்பற்றுதல் மரபுவழித் தமிழ்த் திறனாய்வின் தொடர்ச்சியை அகற்றிவிட்டது.
- படைப்பை வாசிக்கும் வெவ்வேறு முறைகள் குறித்தும் நவீன இலக்கியங்களின் தரத்தைக் காத்திரமாக உருவாக்கக் களம் அமைத்தன.

**முடிவுரை**

தமிழில் இலக்கிய விமர்சனங்களின் சாளரங்களைத் திறந்து வைத்து, புத்திலக்கியங்கள் பெருகுவதற்கும் சிற்றிதழ்கள் வளர்வதற்கும் கறாரான புதிய இலக்கியச் சூழல் உருவாகுவதற்கும் இக்குழு மிகப் பெரும்பங்காற்றியுள்ளது. உயர்வான நிலையில் வைத்துப் பேணப்படுவது படைப்பும் படைப்பாளியும் என்ற கருத்துநிலை நவீனத்துவத் திறனாய்வளார்களிடமும் நவீனத்துவத் திறனாய்வுகளிலும் பெரிதும் காணப்படுகிறது.

**துணை நூல்கள்**


1. கிருஷ்ணசாமி, ப. (ப.ஆ.), 1991, க.நா.சு. இலக்கியத்தடம், காவ்யா, பெங்களூர் - 600 029
2. கைலாசபதி,க. 2012, திறனாய்வுப் பிரச்சினைகள், குமரன் புத்தக இல்லம், சென்னை.
3. சண்முகசுந்தரம்,சு., எழுபதுகளில் கலை இலக்கியம், காவ்யா, பெங்களூர்-600 029.
4. சுந்தர ராமசாமி, 1998, காற்றில் கலந்த பேரோசை, காலச்சுவடு, நாகர்கோயில் – 01.
5. ஞானசம்பந்தன்,அ.ச. 1984, இலக்கியக் கலை, சைவசிந்தாந்த பதிப்பகம், சென்னை.
6. முத்துமோகன்,ந., தமிழகத்தில் நவீனத்துவ விமர்சனம், (ப.ஆ.) மதிவாணன்.பா., & சேரன், 2005, தமிழ் இனி, காலச்சுவடு, நாகர்கோவில் – 01.
7. தமிழவன், 2000, இருபதில் நவீனத் தமிழ் விமர்சனங்கள், காவ்யா, பெங்களூர், 600 029.
8. தி.க.சி, 1993, தி.க.சியின் திறனாய்வுகள், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை.
9. பஞ்சாங்கம்,க. 1996, தமிழ்த் திறனாய்வு வரலாறு, அகரம், கும்பகோணம், 613 007.
10. பாரதி கட்டுரைகள், 1981, வானதி பதிப்பகம், சென்னை.
11. செல்லப்பா,சி. 1974, சு. தமிழில் இலக்கிய விமர்சனம், எழுத்து பிரசுரம், சென்னை.
12. பாலா, (தொ.), 1979, தமிழ் இலக்கிய விமரச்சகர், அன்னம், மதுரை -01.
13. பிரமிள்,1986, தமிழின் நவீனத்துவம் (எழுத்துக் கட்டுரைகள்), லயம் வெளியீடு, அந்தியூர்.
14. வெங்கட்சாமிநாதன், 1978, வெங்கட்சாமிநாதன் - ஓர் எதிர்ப்புகுரல், ஸ்ரீமணி பதிப்பகம், இராமநாதபுரம்.


**இதழ்கள்**


1. கண்ணன், சு., காலச்சுவடு, மாத இதழ், நாகர்கோவில்- 01
2. தமிழவன், வித்யாசம், 3 & 4, 1995, ப.6. பெங்களூர், 600 029.